# 5வது சிறுவழக்குகள் நீதிமன்றம்
# ( மோட்டார் வாகன விபத்து வழக்குகள் தீர்ப்பாயம், சென்னை)

# MCOP No.2657/2022

| | |
|---|---|
| சாட்சியின் வரிசை எண் | எமசா1 |
| பெயர் | ஆனந்தகுமார் |
| க/த.பெயர் | சோமசுந்தரம் |
| வயது | 35 |
| விலாசம் | வேடப்பட்டி, திண்டுக்கல் |
| தொழில் | ஓட்டுநர் |

சாட்சி அமர்வு எழுத்தரால் உறுதி மொழி சட்டம் 1969 ன் பிரிவு 6 ன் படி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அதன் படி அவரது சாட்சியம் இன்று 04.11.2025 ல் பதிவு செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் எதிர்மனுதாரர் போக்குவரத்து கழகத்தில் ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். என்னுடைய சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். நான் படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன்.

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

TN 01 AN 2574 என்ற பேருந்தை விபத்து நடந்த அன்று நான் தான் ஓட்டிசென்றேன். விபத்து நடந்த நேரத்தில் அந்த சாலையில் போக்குவரத்து நெரிசலாக இருந்தது. இந்த விபத்து பேருந்தின் இடது புறமாக சக்கரம் மனுதாரரின் காலின் மீது ஏறி இறங்கியது என்றால் சரிதான். இந்த விபத்திற்கு பிறகு எங்கள்

நிறுவனத்தில் எனக்கு புத்தாக்க பயிற்சி வழங்கினார்கள். விபத்து குறித்த முதல் தகவல் அறிக்கை என் மீது தான் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். பேருந்தின் இடது புறமாக தான் பயணிகள் ஏறுவார்கள் ஆகவே நீங்கள் இடது புறம் பொதுவாகவே கவனமாகவே இருக்கவேண்டிய அவசியம் உள்ளது என்றால் நான் 4 பக்கமும் கவனமாக பார்த்து தான் ஓட்டி சென்றேன். விபத்துக்கு நீங்கள் ` தான் முழுபொறுப்பு பாதிக்கப்பட்டவருக்கு உங்கள் தரப்பில் தான் இழப்பீடு வழங்க கடமைப்பட்டுள்ளீர்கள் என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.

**5 வது நீதிபதி**
**சென்னை**